1990 ஜனவரி 22]

தெலுங்கு கங்கைத் திட்டம்.

*42—திரு. இரெ. இராசமாணிக்கம்,
திரு. கே. ஏ. செங்கோட்டையன்,
திரு. பெ. சு. திருவேங்கடம்,
திரு. எம். முத்தையா,
திரு. என். பழனிவேல், மற்றும்
திரு. ஆர். அண்ணாநம்பி.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டமான தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு 1987–88 ஆம் ஆண்டு வரை செய்யப் பட்டுள்ள செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

	(ரூபாய் கோடி.)
தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ஆந்திர எல்லையில் அமையும் பணிகளுக்கு 1987–88 ஆம் ஆண்டு முடிய செலவு	248.12
இதில் தமிழகத்தின் பங்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை	68.66
ஆனால் இதுவரை தமிழகம் கொடுத்த தொகை (1987–88 வரை)	47.00
சென்னை குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாட்டில் அமையும் பணிகளுக்கு 1987–88 முடிய செலவு	11.58
மொத்தச் செலவு 1987–88 முடிய ..	58.58

*1813.—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குக் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவர திட்டம் போடப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) இதனால் பல இடையூறுகள் ஏற்படும் என்பது அரசுக் குத் தெரியுமா ?

(இ) இதுபற்றி நிபுணர் குழு ஆய்வு செய்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1990 ஜனவரி 22

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 18—4—1983 அன்று ஆந்திர மற்றும் தமிழக மாநில முதல்வர்களிடையே ஏற்பட்ட உடன்படிக்கையில் கண்டுள்ள ஷரத்து எண் 5-ன்படி ஆந்திர அரசு தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில எல்லையில் ஏற்படும் இழப்புகள் போக, 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்க உறுதி செய்து ஒப்புக்கொண்டுள்ள தால் இடையூறுகள் ஏற்பட சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(இ) 20—7—1976 அன்று சென்னையில் கிருஷ்ணா நதி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களான மகாராட்டிரம், கர்நாடகம், ஆந்திர மாநிலம் மற்றும் தமிழ்நாடு மாநில தொழில் நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழு கூடி ஆய்வு செய்தார்கள்.

(ஈ) தலைமைப் பொறியாளர்கள் மட்டத்தில் ஆய்வு செய்தபோது சென்னைக்கு குடிநீர் வசதி செய்யும்பொருட்டு கிருஷ்ணா நதி நீரை குழாய்கள் மூலம் கொண்டு வந்தால் ஆந்திராவிலிருந்து சென்னை வரை நிலவாட்டம் போதுமானதாக இல்லாததினால், அதிக குதிரைத் திறன் கொண்ட விசை இறைப்பிகளை பயன்படுத்தவேண்டும் எனவும், இதனால் திட்டத்தின் மதிப்பீடு மிகவும் அதிகரிக்கும் எனவும், திறந்த வெளிக் கால்வாய் மூலம் தண்ணீரைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. தவிரவும் ஆந்திர அரசு தமிழ்நாடு எல்லையில் 12 மில்லியன் கனஅடி தண்ணீரை (இழப்புக்கள் போக) தருவதாக ஒப்பந்தம் செய்து உறுதி தந்துள்ளதால் இடையூறு ஏற்பட வாய்ப்பில்லை.

(10–10 மணி)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டத்திற்குத் தேவையான அனுமதியை மத்திய அரசு வழங்கிவிட்டதா? இந்த திட்டத்திற்கு இறுதியாக எவ்வளவு செலவு என்று கணக்கிடப் பட்டிருக்கிறது? அப்படி கணக்கிடப்பட்டு அந்த செலவு செய்து முடிக்கப்பட்ட பிறகு சென்னை நகருக்கு தேவையான தண்ணீர் கிடைக்குமா என்பதை தங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தெலுங்கு கங்கை திட்டப்பணிகள் கலைஞர் அவர்கள் முயற்சிக்குப் பிறகு, நம் முடைய முதல்வர் அவர்களும் முன்னாள் ஆந்திர முதல்வர் அவர்களும் சேர்ந்து பேசியதற்குப் பிறகு, விரைவுபடுத்தப்பட்ட பிறகு வேகமாக அந்த பணிகள் செயல்பட்டு வருவதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நானும் நேரிலேயே சென்று

1990 ஜனவரி 22]

அந்த பணிகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறோம். அந்தப் பணிகள் அங்கே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக இருக்கின்ற செலவு மொத்தம் 938 கோடி ரூபாய் ஆகும். அதிலே தமிழ்நாட்டினுடைய பங்கு 251 கோடி ரூபாயாக வும், ஆந்திர மாநிலத்தினுடைய பங்கு 698 கோடி ரூபாயாகவும் இருக்கிறது. இது முதல் கட்ட அளவில் ஒரு நாளைக்கு 400 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத்திட்டம் ஆந்திர மாநிலம் வரையிலே குடி தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஒப்பன் கேனால் வெட்டித்தான் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆந்திர அரசு அங்கே வேண்டியவர்களுக்கெல்லாம் பாசன வசதி செய்து விட்டுத்தான் அந்த தண்ணீரை இங்கே கொடுப்பதாக ஒப்புதல் அளித்ததாகத் தெரிகிறது. அப்படி இருக்கின்ற நேரத்தில் நம்முடைய சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவருவதற்கு எந்த வழி வகையிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என் பதை அறிவிக்க இயலுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு 15 டி. எம்.சி. தண்ணீரை அவர்களிடம் இருந்து பெற்று நம் முடைய எல்லையில், ஆந்திராவிலே இருந்து பிரிகின்ற போது, தமிழகத்திற்கு 12 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தமே ஆகியிருக்கின்றது. அவர்கள் ஒப்புக்கொண் டார்கள். ஆந்திர பகுதியிலே அவர்கள் திறந்த கால்வாய் மூல மாகத்தான் தண்ணீரை கொண்டுவருகிறார்கள். எனவே நாம் பெறுகின்ற 12 டி. எம்.சி. தண்ணீர் அளவிலே எந்தவிதமான இழப்பும் இருக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த இழப்பும் இருக்காத வகையிலே நிபுணர்கள் குழு ஒன்று கூடிதான் இந்த முடிவுகளை எடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ஏற்கெனவே ஆந்திராவிலேயிருந்த அரசு இந்த திட்டத்தை அக்கறையோடு செய்ததாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. இப்போது ஆந்திராவிலே அரசு மாறியுள்ளது. இன்றைய அரசு இந்த திட்டத்திலே அக்கறை செலுத்துகிறதா? அதோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கின்றார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களால் படிக்கப் பெற்று அதற்கு நன்றி கூறுகின்ற வகையில் திரு. பெ. சு. திருவேங்கடம்

அவர்களால் முன்மொழியப்பட்டு, இங்கே விவாதிக்கப்படுகின்ற கவர்னர் உரை விவாதத்தில் நன்றாகக் காணலாம். அந்த உரையிலே இருக்கிறது. ஆந்திர மாநில முதல்வர் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்குக் கூட பாராட்டு தெரிவித்து அவர்கள் தெலுங்கு கங்கைத் திட்டத்திலே நிச்சயமாக உதவுவார்கள் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்பதற்காகப் பாராட்டு தெரிவித்திருக்கிறோம். திரு. பெ. சு. திருவேங்கடம் அந்த வரியை மாத்திரம் படிக்காமல் முன்மொழிந்து நன்றி கூறிப் பேசியிருக்கிறார் என்பது தெரிகிறது.

திரு. எம். முத்தையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மக்கள் அவர்களுடைய எல்லையைக் கடந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் கள் என்பது உண்மையா ? அதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் எதுவும் அரசிடம் இல்லை. அப்படி தனிப்பட்ட புகார்கள் இருக்குமானால் அதைக் குறித்தும் இப்போது இருக் கிற அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டம் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த திட்டம். இந்த நல்ல திட்டத்தை இன்றைய முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு கொண்டு வந்த திட்டம் என்பதற்காக நாங்கள் எந்த திட்டத்தையும் கைவிட்டுவிட மாட்டோம்.

(10.15 மணி)

பேராவூரணி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*203—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டிட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும் ?